## தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், (மு.கூ.பொ அவர்களின் செயல்முறை ஆணைகள்.

| | | |
|---|---|---|
| பிறப்பிப்பவர் | : | திரு.ம.மரிய சகாய ஆண்டனி,<br>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(மு.கூ.பொ) |
| இடம் | : | தென்காசி. |

செயல்முறை ஆணை எண் அ1/ 2911/2024, நாள்:09.11.2024

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்பு பிரிவு - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி -IV தேர்வின் இளநிலை உதவியாளர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டது- சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு - திரு.செ.கமல்ராஜ், என்பவர் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு இளநிலை உதவியாளரக ஒதுக்கீடு செய்யப்பட்டமை - பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை : 1) தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண். 1939/ PSD- D-2/2023, நாள்: 04.09.2023

2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/13013/2023, நாள்: 10/10/2023.

3)மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், தென்காசி அவர்களது செ.மு.ஆ.எண் அ1/3688/2023, நாள் 17.10.2023.

(((((())))

ஆணைகள் :

பார்வை (1)-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி – IV -இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.செ.கமல்ராஜ் அவர்களுக்கு பார்வை 3-இல் காணும் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து தனியர் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 20.10.2023 அன்று முற்பகல் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 19.10.2024 பிற்பகல் நிறைவு செய்தார். அதனை தொடர்ந்து திரு.செ.கமல்ராஜ், இளநிலை உதவியாளர் அவர்களது பணி , இவர் பணியில் சேர்ந்த நாளான 20.10.2023 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

திரு.செ.கமல்ராஜ், இளநிலை உதவியாளர் அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 20.10.2023 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவக்காலத்தில் உரிய துறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை தனியர் உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9/11/24

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(மு.கூ.பொ)
மாவட்டவேலைவாய்ப்புமற்றும்
தொழில்நெறிவழிகாட்டும்மையம்,
தென்காசி.

9/11/2024

பெறுநர்,
திரு.செ.கமல்ராஜ்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தென்காசி.

நகல்,

1) பணிப்பதிவேடு,
2) இருப்புக்கோப்பு